Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# மலங்கரை கத்தோலிக்க இளையோர் தினம்

அக்டோபர் 01



To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




மலர் 20 அக்டோபர் 2023 இதழ் 10

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.10.2023 | Sunday | 9.00 am<br>4.00 pm | Holy Mass<br>Holy Mass | Sooriacode<br>Puspagiri |
| 02.10.2023 | Monday | 10.00 am<br>2.00 pm<br>4.30 pm | Career guidance program<br>IELTS Inaguration<br>UCC Drugs Awareness Procession | Kuzhithurai<br>Azhagiamandapam<br>Kalluvilai |
| 04.10.2023 | Wednesday | 6.30 am | Holy Mass | DM Provincial House |
| 05.10.2023 | Thursday | | Holy Mass | Trichy, Rosary Church |
| 08.10.2023 | Sunday | 8.00 am | Holy Mass | Peruvalikadavu |
| 09,13.10.2023 | Mon - Friday | | Annual Retreat | Diocese of Palyamkottai |
| 14.10.2023 | Saturday | 6.30 pm | Vespers | Changai |
| 15.10.2023 | Sunday | 2.00 pm | Diocesan Youth Day | |
| 20.10.2023 | Friday | 10.00 am | Convocation-Mar Ephraem | Elavuvilai |
| 21.10.2023 | Saturday | 10.00 am | Kolping Day | MIDS |
| 22.10.2023 | Sunday | 2.00 pm | Rosary Procession – Legion Of Mary | Adaikakuzhy - Ambilikonam |
| 25.10.2023 | Wednesday | 10.00 am | Marriage | Maharaja Nagar |
| 27.10.2023 | Friday | 10.00 am | Marriage | Marthandam |
| 28.10.2023 | Saturday | 11.00 am<br>3.00 pm | Betrothal<br>Preaching | Kannnaravilai<br>Madathattuvilai |
| 29.10.2023 | Sunday | 10.00 am<br>2.30 pm | Holy Mass<br>District Pastoral Council Meet | Adichavilagam<br>Nagarcoil |
| 30.10.2023 | Monday | 10.00am | Marriage | Cheruvarakonam |
| 31.10.2023 | Tuesday | | Class | St. Mary's Major Seminary, Tvm |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 அக்டோபர் 2023 இதழ். 10

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***



இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**உயர் பேராயர் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 1/2023

தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுடிவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்

## 93-ம் மறுவொன்று ஆண்டுவிழாவும் திருஅவை சங்கமும்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை 93-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவையும் திருஅவை சங்கமத்தையும் 2023, செப்டம்பர் 20, 21 தேதிகளில் மூவாற்றுபுழை மறைமாவட்டத்தில் வைத்து கொண்டாடப்படுவது நீங்கள் அறிந்ததே. மறுவொன்றிப்பு இயக்கத்தின் நூற்றாண்டு விழாவிற்கு இவ்வாண்டுகளில் திருஅவை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. 1930-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் நாள் இறை ஏவுதலால் இறையூழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை ஏற்றி வைத்த மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை என்ற ஒளி உலகின் பல்வேறு பகுதிகளில் நற்செய்தி ஒளியை நம் வழியாக பகிர்ந்தளித்து கொண்டிருக்கிறது. இதுவழியாக இறைவனின் இரக்கமும் இடைவிடாத வழிநடத்துதலும் அனுபவமாகி கொண்டிருக்கிறது. நமது திருஅவையின்

திருப்பணிகளை வலுப்படுத்தி வழிநடத்தும் இறை இரக்கத்திற்கு முன் நம்மையே ஒப்புக்கொடுப்போம். திருஅவையின் திருப்பணிக்காக நம்மை ஒப்புக்கொடுக்கும் எழுச்சியின் நாளாகவும் புது பிரதிஷ்டையின் நாளாகவும் இந்நிகழ்வுகள் அமையட்டும்.

கத்தோலிக்க திருஅவையுடன் ஒன்றித்த வாழ்வை மீண்டும் உதயமாக்க இறையூழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை கொண்ட பேரார்வத்தின் வெளிப்பாடே மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை. கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒன்றிப்பை உளவாக்கும் இறைவாக்கினரின் குரலோசையாக செயல்படும் திருப்பணியை இக்காலகட்டத்தின் சிறப்பு பணியாக நமது திருஅவை ஏற்றுக் கொண்டுள்ளது. பிரிவுகளும் பிளவுகளும் எதிர்சாட்சியங்களாக மாறுகின்றன. இரண்டாம் வத்திகான் பொதுச்சங்கம் கூறுவது இங்கே குறிப்பிடதக்கது. "கத்தோலிக்கத் திருச்சபை கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட உண்மையனைத்தாலும் எல்லா அருள் வழிகளாலும் வளப்படுத்தப் பெற்றிருக்கிறது. எனினும் உறுப்பினர்கள், தாங்கள் கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு ஆர்வத்தோடு அவைகளின்படி வாழத் தவறுகிறார்கள். இக்காரணத்தால், திருச்சபையின் முகம் பிற கிறிஸ்தவ சகோதரர், சகோதரிகளுக்கும் உலக முழுவதற்கும் ஒளி குன்றிக் காணப்படுகின்றது; இறையாட்சியின் வளர்ச்சி தடைபடுகிறது. எனவே, கத்தோலிக்கர் யாவரும் கிறிஸ்தவ நிறை வாழ்வை அடை முயல வேண்டும்'' (மத்.4). இப்பொறுப்புள்ள பணிக்கு நம் உள்ளங்களை தூண்டி, எழுச்சியோடு செயல்பட தூண்டும் நிகழ்வே மறுவொன்றிப்பு ஆண்டுவிழா. ஒன்றிப்பின் அடையாளமாக அகில உலக திருஅவையில் வளர்ந்து வரும் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவைக்கு கடவுள் தந்த திருப்பணியை மீண்டும் நினைவூட்டும் நிகழ்வே சபை சங்கமம். ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் காலம் கடந்து போகாத கடப்பணி இதுவே. ஒன்றிப்பும் இணைந்த செயல்பாடும் நடந்தேற செய்வதே இக்கடப்பணி.

தூய ஆவியின் ஏவுதலுக்கு தடைகள் கட்டி எழுப்பாமல் ஆண்டவரின் ஒரே திருஅவை ஒன்றிப்புக்கு எல்லா கிறிஸ்தவர்களையும் கூட்டி சேர்ப்பது



தூய்மையான ஒரு குறிக்கோளாக விளங்குகிறது (மத்.18). இக்குறிக்கோளை அடைவதற்கான அழைப்பு மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவைக்கு கிடைக்க பெற்றிருக்கிறது. மனிதனுக்குரிய இயல்பான மாறுபட்ட மனநிலைகள் தூய ஆவியின் ஈடுபாட்டிற்கு தடை போட்டு திருஅவையின் ஒன்றிப்பிற்கு இழப்பு ஏற்படுத்துகின்ற பிரிவினைகளாக வளர்சியடையாமல் இருக்க நாம் விழிப்புடன் செயல்பட வேண்டும். விண்ணக தந்தையின் விருப்பங்கள் நிறைவேற நம்மையே வெறுமையாக்குவதற்கான அருளை மறுவொன்றிப்பு நமக்கு வழங்கட்டும். திருஅவையாக இணைந்து புறாக்களை போல கபடற்ற மனநிலையுடன் தூய ஆவியின் குரலுக்கு செவிமடுத்து, பாம்புகளை போல விவேகத்துடன் (மத். 10:16) காலத்தின் சோதனைகளை ஆய்ந்தறிந்து அவற்றின் மீது வெற்றி கண்டு முன்னேற்றம் காண்போம். அனைத்தும் இறைமாட்சிக்காக செய்யவும் சிந்திக்கவும் முயற்சித்த இறையூழியர் பேராயர் மார் இவானியோர் ஆண்டகை நமக்கு முன்மாதிரியாக உள்ளார். நம்முடைய பணியை திறம்பட செய்வதில் அவர் நமக்கு உந்து சக்தியாக உள்ளார். அவரது மன்றாட்டு நமக்கு துணையாகட்டும்.

93-வது மறுவொன்றிப்பு நிகழ்வுகளை முன்னின்று வழிநடத்தும் மூவாற்றுபுழை மறைமாவட்டத்தையும் அதன் ஆயர் மேதகு யூஹானோன் மார் தியோடோசியஸ் ஆண்டகை அவர்களையும், குருக்கள், இருபால் துறவிகள், இறைமக்கள் சமூகத்தையும் நன்றியுடன் நினைத்து ஒப்புகொடுத்து ஜெபிக்கவும் செய்கிறேன். ஆடம்பர கூட்டுதிருப்பலியிலும், நடைபெறும் கூடுகைகளிலும், இறையியல் வகுப்புகளிலும், நற்செய்தி சங்க ஜெப வழிபாட்டிலும் உங்களுடைய பங்கேற்பை உறுதிபடுத்த வேண்டுமென்று நினைவூட்டுகிறேன். மறுவொன்றிப்பு விழா நிகழ்வுகள் அனைத்தும் தோழமை உணர்வு கலந்த வரலாற்று நிகழ்வுகளின் நினைவு கலந்த சாட்சியத்தின் அடையாளங்களாக மாறட்டும். நம்முடைய மறைமாவட்ட மக்கள் மறைத்தூதுப்பணி மையங்கள், அர்பண வாழ்வின் இல்லங்கள், என அனைவரும் 2023 செப்டம்பர் 20, 21 தேதிகளில் மூவாற்றுபுழை மார் இவானியோஸ் நகரில் (Vimalagiri Bishop's House)

வைத்து நடைபெறும் மறுவொன்றிப்பு ஆண்டு விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று ஆசீர் பெற வேண்டுமென்று அன்புடன் அறிவுறுத்துகிறேன். அன்றைய திருப்பலியின் மத்தியில் சேகரிக்கப்படும் காணிக்கை மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவை பொறுப்பேற்று நடத்தும் மூவாற்றுபுழை மறைமாவட்டத்தின் பிறர்நல இரக்க செயல்களுக்காக வழங்கப்படும். செப்டம்பர் 21-ம் நாள் திருப்பலியில் பங்கேற்கும் அனைவரும் இந்த அர்பணத்திற்கு ஆயத்தமாக வரும்படி அன்புடன் நினைவூட்டுகிறேன்.

நம்முடைய இந்த கூடுகை திருஅவை மீது நாம் கொண்ட அன்பின் அடையாளமாக அமையட்டும். இந்த அன்பை புதிய தலைமுறைக்கு பகிர்ந்தளிப்போம். கிறிஸ்தவ வாழ்வில் நாம் விழிப்புடன் செயல்பட வேண்டுமென்றும் இன்னும் பக்குவமான கிறிஸ்தவர்களாக மாற வேண்டுமென்றும் அனைவரையும் அறிவுறுத்த விரும்புகிறேன். வாக்குவாதங்களும் பிரிவினைகளும் கண்டு மனம் நொந்து போன மலங்கரை சபை மக்களாகிய நாம் அருளால் பெற்ற கத்தோலிக்க திருஅவை வாழ்வை குறித்து பெருமைப்படுவோம். ஆன்மாவின் ஏவுதலுக்கேற்ற தோழமை உள்ளம் கொண்டு இணைந்து நிற்கவும், செயல்படவும் முயற்சிப்போம். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. இறை அன்னையாகிய தூய கன்னிமரியாவினுடையவும், திருத்தூதர்களினுடையவும், குறிப்பாக நம் தந்தையாகிய மார் தோமா சீடருடையவும் வேண்டுதல்களால் இது அமைவதாக. ஆமென்.

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

25-08-2023
காதோலிக்கேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



## மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை

# இளையோர் தினச்செய்தி - 2023

*மேதகு ஆயர்களே, குருக்களே, இருபால் துறவிகளே, அன்பு இறைமக்களே, என் அன்பிக்கினிய இளம் நெஞ்சங்களே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையானது மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்க தினத்தை அக்டோபர் மாதம் 1-ம் தேதி கொண்டாடுகிறது. MCYM-ன் விண்ணக பாதுகாவலரான தூய பிரான்சிஸ் அசிசியின் திருவிழாவுடன் நெருங்கி வரும் ஞாயிறன்று இளையோர் தினம் கொண்டாடுவது நமது வழக்கமாக இருந்து வருகிறது. இளையோர் தின வாழ்த்துக்களை அனைவருக்கும் குறிப்பாக இளையோர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். தூய பிரான்சிஸ் அசிசியை போல மற்றொரு கிறிஸ்துவாக மாறி கிறிஸ்துவின் மீது அன்பு கொண்டு அவர் பொருட்டு பிறரை நேசிக்கவும் அவர்களுக்கு பணிவிடைபுரியவும் தேவையான உத்வேகத்தை இந்த விழா நமக்கு வழங்கட்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

### இளையோரை பெயர் சொல்லி அழைக்கும் ஆண்டவர்

உலக இளையோர் மாநாடு 2023 ஆகஸ்ட் 1 முதல் 6-ம் தேதி வரை லிஸ்பெனில் வைத்து நடந்ததை நாம் அறிவோம். இந்த இளையோர் சங்கமத்தில் உலகின் பல்வேறு பகுதியிலுள்ள இளம் நெஞ்சங்கள் அனைத்துலகின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் ஒன்றிணைந்து அவர்களது இளைமையை கொண்டாடி மகிழ்ந்ததை ஊடகங்கள் வாயிலாக கண்டறிந்தோம். திருஅவையும் சமூகமும் இன்றைய இளைய தலைமுறையினரோடு மிகுந்த எதிர்பார்ப்பும் எதிர்நோக்கும் கொண்டுள்ளது. ஆண்டவரை அறிந்து அன்பு செய்கின்ற இளையோர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது என்ற உண்மை நல்ல எதிர்பார்ப்பை தருகிறது. இளையோர் மாநாட்டின் தொடக்கச் செய்தியில் திருத்தந்தை இளையோரை பார்த்து கூறியது குறிப்பிடத்தக்கது : “நீங்கள் எதிர்பாராத விதமாக இங்கு வரவில்லை. ஆண்டவர் உங்களை அழைத்தார். இந்நாட்களில் மட்டுமல்ல உங்கள் வாழ்வின் தொடக்க நாள் முதல் அவர் உங்களை பெயர் சொல்லி அழைக்கின்றார். நம்மை பெயர் சொல்லி அழைக்கின்ற இறைவனின் வார்த்தைக்கு செவிமடுப்போம்”. கிறிஸ்துவின் இளையோர்களாகிய நீங்கள் எவ்வளவோ பேறுபெற்றவர்கள். கடவுள் உங்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்திருப்பது

பெரும் பாக்கியமே. இந்த உண்மையை நாம் என்றும் நினைவு கூர வேண்டும். வளர் இளம் பருவத்தின் வாழ்க்கையில் வந்து போன வெற்றித் தோல்விகளில் சில நேரங்களில் எவரும் என் மீது அக்கறை காட்டவில்லை என்று எண்ணியிருக்கலாம், வாழ்க்கையில் ஏமாற்றத்தின் இருள் படர்ந்திருக்கலாம். இப்படிபட்ட சூழல்களில் ஆண்டவர் நம்மை பெயர் சொல்லி அழைக்கிறார் என்ற உண்மையை இதயத்தின் ஆழத்தில் பதிவுச் செய்ய வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் உலக இளையோர் தினத்திற்கான மையச் சிந்தனையை மாசற்ற மரியாவின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு வழங்கினார். இலட்சகணக்கான இளையோரிடம் திருத்தந்தை கேள்வி எழுப்பினார். மங்கள வார்த்தை பெற்ற மரியா துரிதத்தில் எழுந்து உறவினரான எலிசபத்தை காணச் சென்றாள். இதற்குபின் இருந்த உந்து சக்தி என்ன? திருத்தந்தையே அதற்கு பதில் மொழியும் கூறினார். கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொண்ட மரியாவின் மனம் மகிழ்சியால் நிறைந்தது. தன்னுடைய தேவையை விட பிறருடைய தேவைக்கு முதலிடம் கொடுக்க இந்த மகிழ்ச்சி மரியாவை தூண்டியது. பிறிதொருவருடைய வாழ்வில் விரைவில் கடந்து சென்று அவரை ஆற்றல்படுத்த மரியாவின் உள்ளம் அனுபவமாக்கிய மகிழ்ச்சி உத்வேகம் மூட்டியது. திருத்தந்தை தொடர்ந்து கூறுவதை பார்ப்போம்: “மகிழ்ச்சி மறைத்தூது தன்மை கொண்டது. மகிழ்ச்சி ஒருவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. மகிழ்ச்சி பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கானது. நம் உள்ளங்களில் குடிகொள்ளும் இறையன்பே இம்மகிழ்ச்சியின் ஊற்று. “அன்பு செய்பவர்களுக்கு பணிவிடை செய்யவே முடியும், சோம்பி திரிய இயலாது. பணிவிடை செய்ய துரிதமாக புறப்படுபவர்கள் பிறர் நல சேவைக்காக தங்களை அர்ப்பணம் செய்யவும் விரைந்து செல்வர்”. கிறிஸ்துவின் மீதுள்ள அன்பால் உளம் பூரித்து நிற்கும் இனிய இளம் நெஞ்சங்களே! பிறருடைய வாழ்வில் கடந்து செல்வதற்கான வேகம் இன்று நமக்கு இன்றியமையாதது. அன்பு செய்ய காட்டும் வேகம் கிறிஸ்தவ இளமையின் அடையாளமாக உள்ளது.

**புனிதமான அடிச்சுவடுகள்**

பாதச்சுவடுகளை விரைந்து வைக்க பயின்று போன இந்த காலத்தில் அளவு கடந்த ஆவேசத்துடன் நடத்தப்படும் போராட்டங்கள் பெரும்பாலும் தூய்மையற்ற நிலைக்கு இட்டுச் செல்லும் அடிச்சுவடுகளாக மாறியுள்ளன. இது மிகுந்த கவலை தருகின்ற ஒரு உண்மை. அனைத்தையும் நேரலையாக காணத்துடிக்கும் உலகில் காணப்படும் வேகம் வாழ்விலும் தேவை என



பிடிவாதம் கொள்ளும் இளையோர்கள் வாழ்வில் நிலைத்தடுமாறி நிற்பதை தினமும் பார்க்கிறோம். தடுமாற்றத்திற்கான காரணம் அவர்களின் அடிச்சுவடுகளின் தவறு எனலாம். கிறிஸ்தவ இளையோர்களுக்கு புனிதமான அடிச்சுவடுகள் இன்றியமையாதது. புனிதமான அடிச்சுவடுகள் அமையவேண்டுமானால் தேவையானவை பல.

1. குறிப்பிட்ட பாதையில் கடந்து செல்பவரின் வாழ்வு புனிதமாக இருக்க வேண்டும்.
2. அடிச்சுவடுகள் வைக்கப்படும் பாதைகள் புனிதமானதாக இருக்க வேண்டும்.
3. அடிச்சுவடுகளின் நோக்கமும் புனிதமானதாக இருக்க வேண்டும்.

சுருங்க கூறின், குறிக்கோளை போல மார்கமும் புனிதமாக இருக்க வேண்டும்.

புனிதத்தின் உறைவிடம் புனிதத்தின் நிறைவான இறைவன். புனிதத்தின் படிநிலைகளுக்கு கடந்து வர இறைமனித உறவு இன்றியமையாதது. இறைவனிடம் நமக்கிருக்கும் உறவு ஒரு அலங்காரமாக (Fashion) மதிப்பிழந்து விடாமல் ஒரு பேரார்வமாக (Fashion) மாற வேண்டும். இந்த இறையனுபவம் நமது வாழ்க்கையை தொடும் அனுபவமாகமும் உறுதிபாடுமாக இருக்க வேண்டும். தூய பவுல் இந்த இறையனுபவத்தின் உச்சநிலையை இறையன்பு என அழைக்கிறார். “கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கப் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?” (உரோ 8:35). இந்த அன்பு அவரை மிகச்சிறந்த நற்செய்தி தூதுவராக மாற்றியது. இந்த இறையனுபவமே ”நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு” (1 கொரி 9:16) என்று கூற பவுலடியாரை தூண்டியது. இளையோர்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாக மாற வேண்டுமானால் அவர்களது வாழ்வு ஆழமான கிறிஸ்து அனுபவத்தாலும் அன்பாலும் வழிநடத்தப்பட வேண்டும்.

நாத்திகவாதத்தை கடந்து கடவுளை அறியாமை, கடவுள் மறுப்பு, பகுத்தறிவு கொள்கை போன்றவை நம்மை தாக்கும் இச்சூழலில் கடவுளிடம் நமக்கு இருக்கும் உறவை குறித்து இளையோர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். தனிமனித வாதம் எல்லை கடந்து போகும்போது நாம் இணைந்திருக்கும் திருஅவை சமூகத்தின் இறையனுபவத்திலிருந்து இளையோர்கள் அகன்று செல்வது இயல்பு. மாறுபட்ட வேலைகள்,

முரண்பாடான வாழ்க்கை சூழல்கள், திருமண வாழ்வு போன்ற நிலைகளில் இளையோர்கள் அடியெடுத்து வைக்கும் போது கடவுளையும், நம்பிக்கை உண்மைகளையும், இறைகாரியங்களையும் கவனிக்காமல் இருப்பது நாம் எடுக்கும் அடிச்சுவடுகளில் ஆபத்து மறைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கட்டுபாடற்ற சுதந்திரம் கடவுள் மறுப்பின் மறுவடிவம் என்பதை இளையோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை சூழல்கள் மாறுவதற்கேற்ப நமது நம்பிக்கை வாழ்வும் கடவுளிடமுள்ள உறவும் தோய்ந்து விடலாகாது.

நமது நம்பிக்கை பாரம்பரியங்களுடன் நாம் கொண்டுள்ள ஆக்கபூர்வமான மனநிலை இறையனுபவ வரலாற்றுடன் நமக்கிருக்கும் உறவை உறுதிப்படுத்துகிறது. நம்பிக்கை பாரம்பரியங்களோடு நாம் காட்டுகின்ற நெருக்கம் இளமை பருவத்தின் நமது முன்னேற்றத்திற்கு உறுதியான திசைகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு மாறான அனுபவங்கள் இளையோர்களை தவறான பாதையில் இட்டுச் செல்லும். மேலும் மதிப்பீடுகளை இழந்த வாழ்க்கை முறைக்கும் மக்கள் கூட்ட புரட்சிக்கும் வழிவகுக்கும். மக்கள் கூட்டத்தில் மாண்பிழந்த இளைஞனோ அல்லது இளம்பெண்ணோ ஆக கடவுள் நம்மை பெயர் சொல்லி அழைக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கடவுள் தமது சாயலிலும் உருவிலும் நம்மை படைத்தார். அவர் நம்மை பெயர் சொல்லி அழைத்தார். இதுவே நமது ஆளுமையின் அடித்தளம். நமது முன்னோர்கள் நமக்கு பகிர்ந்து தந்த இறையனுபவத்தின் தொடர்ச்சி நமது வாழ்வு வழியாக புதிய தலைமுறைக்கு வழங்கப்பட வேண்டும். புதிய தலைமுறைக்கு இந்த இறையனுபவத்தை பகிர்ந்தளிக்கும் கடமை நமக்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்த கடமையை நாம் மறந்துவிட்டால் அது வரலாற்றுக்கு நாம் காட்டும் துரோகமாக அமைந்து விடும்.

## இணைந்து பயணிப்போம்

புனிதத்தை நோக்கிய பயணம் நாம் தனிமையாக நடத்துவதல்ல; மாறாக இணைந்து மேற்கொள்ளும் ஓர் திருப்பயணம். ஒரே குறிக்கோளை அடைவதற்காக ஒரே மனநிலையுடன் ஒரே திருஅவையாக நாம் நடத்தும் திருப்பயணம். அனைவரையும் இணைத்துச் செல்ல கூட்டொருங்கியக்க மனநிலையை இத்திருப்பயணத்தில் பங்கேற்கும் அனைவரும் ஏற்றுகொள்ள கடமைபட்டிருக்கிறோம். கடைநிலையில் உள்ளவர்களையும், கைவிடப்பட்டவர்களையும், அடித்தட்டிலிருப் பவர்களையும் சிறப்பாக



கருத்தில் கொள்ளும் ஒரு திருப்பயணம். இலாபம் நஷ்டம் பார்த்து போட்டியிடும் இவ்வுலகில் சகோதரனை கவனித்துக் கொள்ள தனது செல்வத்தையும் நேரத்தையும் தானம் செய்த நல்ல சமாரியன் இளையோர்களுக்கு சிறந்த முன்மாதிரி மட்டுமல்ல ஒரு சவாலாகவும் உள்ளார். எந்த சூழலிலும் எல்லாருடைய வாழ்விலும் நன்மையை அணுகுவதற்கான சவால் இது. நன்மையில் நாட்டம் கொள்வதும் நன்மை செய்வதற்கான வேகவும் இளையோர்களின் அடையாளங்களாக மாற வேண்டும்.

2023 அக்டோபர் 1, ஞாயிற்றுகிழமை நமது அனைத்து பங்குகளிலும், மறைவட்டங்களிலும், மறைமாவட்டங்களிலும் பொருள் செறிந்த நிகழ்வுகளுடன் இளையோர் தினம் கொண்டாட அனைவருக்கும் அன்புடன் அழைப்பு விடுக்கிறேன். இளையோர் தினத்தில் அனைத்து இளையோரும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று தகுதியுடன் நற்கருணை உட்கொள்ள வேண்டும். அத்துடன் பங்கிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஒன்றிணைத்து பொது நிகழ்வுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். அன்றைய காணிக்கை திருஅவையின் இளையோர் பணிக்காக மாற்றி வைப்பது நமது வழக்கம். எனவே அன்றைய காணிக்கையை உடனடியாக மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அதில் 50% மறைமாவட்ட இளையோர் பணிகளுக்கும், 50% திருஅவையின் இளையோர் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். எனவே 50% காணிக்கை நமது திருஅவையின் தலைமை செயலகமாகிய காதோலிகேட் மையத்தின் நிதிஅலுவலரை ஒப்படைக்கும் படி அறிவுறுத்துகிறேன். திருஅவை தல இளையோர் தின கொண்டாட்டம் இந்த ஆண்டு மாவேலிக்கரை மறைமாவட்டத்தில் கற்றானம் மலங்கரை சுறியானி கத்தோலிக்க தேவாலயத்தில் வைத்து 2023 அக்டோபர் 7, 8 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. அதற்கு இளையோர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*இவண்,*

**✝ மேதகு ஆயர் மாத்தியூஸ் மார் போளிகார்ப்போஸ்**
திருவனந்தபுரம் அதிஉயர் மறைமாவட்ட துணை ஆயர் &
ஆயர் மாமன்ற இளையோர் பணிக்குழு தலைவர்

07-09-2023
காதோலிக்கேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

# குருக்கள் செய்தி

**மாதாந்திர தியானம்**

மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் ஆயர் இல்லத்தில் வைத்து 12.08.2023 அன்று நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை அனலின் (குழித்துறை மறைமாவட்டம்) அவர்கள் வழிநடத்தினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்களின் அருளுரையோடு கூடுகை நிறைவுற்றது.

**கருத்தரங்கு**

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு 2023 செப்டம்பர் 19-ஆம் நாள் "சமூக ஊடகங்களும் இளைய தலைமுறை சந்திக்கும் சவால்களும்" என்ற தலைப்பில் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கருத்தரங்கை நம் வாழ்வு பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் அருட்தந்தை முனைவர் இராஜசேகர் அவர்கள் வழிநடத்தினார்கள். தொடக்க ஜெபத்துடன் இக்கருத்தரங்கு ஆரம்பமானது. தொடர்ந்து மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண் ஜோஸ் பிறைட் அவர்கள் கருத்துரையாளரை அறிமுகம் செய்து வரவேற்றார்கள். மூன்று அமர்வுகளாக இக்கருத்தரங்கு நடைப்பெற்றது. ஒவ்வொரு அமர்வுகளின் இறுதியில் கேள்வி நேரம் வழங்கப்பட்டது. இறுதியில் ஆயர் அவர்கள் கருத்துரையாளருக்கும் கலந்துகொண்ட குருக்கள் அனைவருக்கு நன்றி கூற நிகழ்வுகள் நிறைவுற்றன.

# நற்செய்தி சங்கம்

நற்செய்தி சங்க தியானம் இந்த மாதம் 9-ம் தியதி தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அருட்தந்தை ராபின்சன் அவர்கள் நமது மலங்கரை கத்தோலிக்க முறையிலான ஆராதனையை பற்றி வகுப்பு எடுத்தார். அருட்தந்தை ஜெபின் ஜாண் அவர்கள் தலைமையில் இறை வார்த்தை பகிர்வும் தொடர்ந்து, இறைவார்த்தை ஜெபம் அனைத்து நற்செய்தி சங்கு உறுப்பினர்களாலும் ஏறெடுக்கப்பட்டது. மதிய உணவினை தொடர்ந்து பாவம் சங்கீர்த்தனம் வழங்கி இறையருளால் கூட்டம் இனிதே நிறைவுற்றது.



# இளம் தம்பதியருக்கான மேய்ப்புப்பணி (AYF)

மலங்கரை கத்தோலிக்க திருஅவை இளம் தம்பதியினரின் ஆன்மீக, பொருளாதார, சமூக மற்றும் உளம் சார்ந்த வளர்ச்சியை முன்கண்டு AYF (Accompanying Young Families) என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்பணிக்குழுவின் உறுப்பினர்கள் 2012 ஜனவரி மாதம் முதல் திருமணமான தம்பதியர் ஆவார்.

**இப்பணியின் நோக்கம் :**

- இளம் தம்பதியினர் திருஅவை ஈடுபாட்டை அதிகரித்தல்.
- அருட்சாதன வாழ்வு உறுதி செய்தல்.
- உறவு வாழ்வுக்கு வழிகாட்டுதல்.
- பிரிந்திருப்போரை ஒன்றுசேர்த்தல்.
- தாய் சேய் உறவு மற்றும் நலம் காத்தல்.
- குழந்தை வளர்ப்பு சவால்களை சந்திக்க பயிற்சி.
- தம்பதியினர் ஆற்றுப்படுத்துதல் வாய்ப்பு வழங்குதல்.
- தொலைத் தொடர்பு சாதனங்களை சரியாக பயன்படுத்த பயிற்சி
- திருமணம் என்னும் திருவருட்சாதனத்தில் பெற்றுக்கொண்ட அருளின் வளர்ச்சியில் ஆனந்தம் காண வைப்பது.

➢ **மூன்று மண்டலங்கள்**

1. மார்த்தாண்டம் 2. களியக்காவிளை 3. நாகர்கோவில்

➢ **பணி பொறுப்பாளர்கள்**

- மறைமாவட்ட புரவலர் (Patron) : **Most Rev. Vincent Mar Paulos**
- மறைமாவட்ட இயக்குநர் : **Fr. Sibi**
- மறைமாவட்ட அருட்சகோதரி ஊக்குநர் (Animator) : **Rev.Sr. Selin**
- மறைமாவட்ட பொதுநிலையினர் பொறுப்பாளர் : **திரு. மோகன்**, முகலூர்

➢ **மண்டல பொறுப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. மார்த்தாண்டம் | அருட்தந்தை | : Rev. Fr. சஜின் |
| | அருட்சகோதரி | : Rev. Sr. பிளஸ்ஸி மரியா |
| | பொதுநிலையினர் பிரதிநிதி | : திருமதி. ஜெனிபா, மாத்தார் |
| 2. களியக்காவிளை | அருட்தந்தை | : Rev. Fr. ஜீவன் ஜார்ஜ் |
| | அருட்சகோதரி | : Rev. Sr. ராணி சேவியர் |
| | பொதுநிலையினர் பிரதிநிதி | : திருமதி. சுனிதா, ஆதிச்சவிளாகம் |
| 3. நாகர்கோவில் | அருட்தந்தை | : Rev. Fr. சுனீஸ் குமார் |
| | அருட்சகோதரி | : Rev. Sr. ஸ்டெபி றோஸ் |
| | பொதுநிலையினர் பிரதிநிதி | : திரு. சேவியர், கிறிஸ்துவிளாகம் |

➢ **Resource Team**

1. மருத்துவர் (Doctor) : Dr. வினோ எட்வின்
2. ஆற்றுப்படுத்துபவர் (Counsellor) : Rev. Fr. பென்னட்
3. மனநிலை நிபுணர் (Psychiatrist) : Dr. அருள் பிரகாஷ்
4. வழக்கறிஞர் (Adocate) : திரு. றாபி
5. மாதிரி குடும்பம் (Model Family) : திரு. வர்கீஸ் மற்றும் திருமதி. ஜெயா குடும்பம் - சூசைபுரம்

## இளம் தம்பதியருக்கான மேய்ப்புப்பணியின் (AYF) ஆரம்ப விழா

இளம் தம்பதியினருக்கான மேய்ப்புப்பணியின் ஆரம்ப விழாவானது 06.09.2023 புதன்கிழமையன்று பிற்பகல் 3.30 மணி அளவில் மரியாகிரியில் வைத்து கொண்டாடப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் இதற்கு தலைமை தாங்கினார்.

ஆரம்ப ஜெபத்துடன், குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், இயக்கத்தின் Resource Team உறுப்பினர்களான Dr. வினோ எட்வின் (Doctor), Dr. அருள் பிரகாஷ் (Psychiatrist), திரு. றோபி (Advocate), திரு. வற்கீஸ் - திருமதி ஜெயா (Model Family) ஆகியோர் கலந்து கொண்டனர். மறைமாவட்ட



இயக்குனர் அருட்தந்தை சிபி அவர்களும், Animater Sr. செலின் DM அவர்களும், மார்த்தாண்டம் மறைவட்ட இயக்குனர் தந்தை, அருட்தந்தை சஜின் மற்றும் மறைவட்ட Animaters Sr. பிளசி மரியா DM, Sr. றாணி சேவியர் DM, Lay Representatives Dr. மோகன், Mrs. சுனிதா, Mr. சேவியர் அவர்களும் இதில் கலந்து கொண்டனர். AYF-ன் Lay Representative ஆகிய Dr. மோகன் அனைவரையும் வரவேற்று பேசினார். மேதகு ஆயர் அவர்கள் தலைமை உரைஆற்றி இதன் நோக்கங்களையும், தேவைகளையும் பற்றி எடுத்துரைத்தார். Resourse Team -லிருந்து Dr. அருள் பிரகாஷ் (Psychiatrist), Mr. றோபி (Advocate) ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்விற்கு வருகைதந்த அனைத்து குடும்பங்களுக்கும் ஜெப அட்டையும், நினைவு பரிசும் வழங்கப்பட்டது இறுதியில் 5.30 மணி அளவில் தொடக்க விழாவானது இனிதே நிறைவுற்றது. இதில் 70 தம்பதியினர் கலந்து கொண்டனர்.

## பேராலயக் கட்டுமானபணிக்கு ஆலயங்கள் வழங்கிய நன்கொடை (2022)

| S.No. | Parish | Amount | S.No. | Parish | Amount |
|---|---|---|---|---|---|
| 1. | Mecode | 14,000 | 8. | Peruvazhikkadu | 7,870 |
| 2. | Chekkittuvilai | 30,200 | 9. | Ganapathikal | 7,000 |
| 3. | Adichavilagam | 28,000 | 10. | Sivalogam | 4,500 |
| 4. | Mariagiri | 50,000 | 11. | Fathimanager | 40,000 |
| 5. | Anakkarai | 27,150 | 12. | Poonthoppu | 1,050 |
| 6. | Mathar | 25,300 | 13. | Soosaipuram | 6,850 |
| 7. | Muthalar | 5,900 | | | |

# ஷாலோம் ஹோம் (Shalom Home) புதிய கட்டிட அர்ச்சிப்பு

நமது மறைமாவட்டத்தில் ஆதரவற்ற முதியோர்களுக்காக, செயல்பட்டு வரும் Shalom Home -ற்கு புதிய கட்டிடம் திரு. ஆபிரகாம் குரியன் அவர்களின் உதவியால் கட்டப்பட்டு, 2023, செப்டம்பர் 6 -ந்தேதி காலை 10.00 மணிக்கு, நமது மறைமாவட்ட ஆயர் மேதகு Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண் ஜோஸ் பிரைட், திரு. ஆபிரகாம் குரியன் குடும்பத்தினர், Shalom Home Superior Rev. Sr. ஜோஸ் ஜார்ஜ், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மேய்ப்பு பணி அறிவுரை குழு உறுப்பினர்கள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில் நன்கொடையாளர் திரு. ஆபிரகாம் குரியன் மற்றும் குடும்பத்தினர்க்கு வாழ்த்துக்களும் நன்றியும் மேதகு ஆயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்பணிகளுக்கு வழிகாட்டி, பல முயற்சிகள் மேற்கொண்ட திரு. கிறிஸ்டல் ஆன்றணி நாகர்கோவில் அவர்களுக்கு, மேதகு ஆயர் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது. பின்னர் இறுதி ஆசீர் மற்றும் அன்பு விருந்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**அக்டோபர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **20, 21** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினர் அருட் சகோதரி பட்றீஸ் DM (95) அவர்கள் 30.08.2023 வியாழக்கிழமை காலை 11:30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள். இவர்களுடைய நல்லடக்க திருச்சடங்குகள் வெள்ளிக்கிழமை மதியம் 2:30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்களின் தாய் இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது. அருட்சகோதரி அவர்கள் பனிச்சமூடு, அஞ்சல், இளையாங்கண்ணி, மார்த்தாண்டம், கூடலூர், தாணிப்பாடி, உடையார் குப்பம், திருச்சி போன்ற இடங்களில் மறைபரப்பு பணியாளராகவும், செவிலியராகவும், துறவற இல்ல தலைவியாகவும் இருந்து செயல்பட்டார்கள். அருள் சகோதரி அவர்களின் துறவற வாழ்வு முழுவதும் தமிழ் மண்ணில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்கு எங்களது இதய அஞ்சலிகள்.



**அருட் சகோதரி பட்றீஸ் டி.எம் (95)**

### வருடாந்திர தியானம்

மேரி மக்களின் துறவற சபையின் 2023 - 2024 ஆம் ஆண்டின் முதல் வருடாந்திர தியானமானது மார்த்தாண்டம் தாய் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதனை அருட்தந்தை ஜோசப் செம்பக்சேரி மற்றும் குழுவினர் நடத்தினார்கள். தியானத்தின் இறுதி நாளில்,

மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருப்பலி நிறைவேற்றி ஆசியுரை வழங்கினார்கள். இந்த தியானத்தில் 90 அருட்சகோதரிகள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுக் கொண்டனர்.

**இளம் மறைபரப்பாளர்களின் கருத்தரங்கு (Little Missionaries Camp)**

இளம் மறைபரப்பாளர்களின் கருத்தரங்கு பனச்சமூடு, மார்த்தாண்டம், களியக்காவிளை ஆகிய மூன்று மறைவட்டங்களில் 17.09.2023 அன்று மதியம் 2 மணிக்கு நடைபெற்றது. இதில் ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர். அருட்சகோதரி பெனடிக்டா அவர்கள் தலைமையில் அருட்சகோதரிகள் இக்கருத்தரங்கை இணைந்து வழிநடத்தினார்கள். இது இளம் பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும் இறை அன்பையும் பகிர்வதாக அமைந்தது.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை யூஜின்
அக்டோபர் 04



அருட்தந்தை சஜித் பிரான்சிஸ்
அக்டோபர் 04



அருட்தந்தை அஜேஷ்
அக்டோபர் 04



அருட்தந்தை கிறிஸ்பின் குரு
அக்டோபர் 25



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**அழகு கலை பயிற்சி – நிறைவு விழா**

மிட்ஸ் நிறுவனத்தில் ஒரு மாத காலமாக சிறப்பான முறையில் நடைபெற்று வந்த அழகு கலை பயிற்சியின் நிறைவு விழாவானது 24.08.2023 அன்று மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் அதனால் பெண்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்புகள் குறித்து விளக்கமளித்தார்கள். மறைமாவட்ட முதன்மை குரு மோண்.ஜோஸ் பிறைட் அவர்கள் பயிற்சி பெற்றவர்கள் அனைவரையும் சிறந்த தொழில் முனைவோர்களாக உயர வேண்டும் என்று வாழ்த்தி அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்த விழாவில் மொத்தம் 30 பெண்கள் கலந்து கொண்டனர்.

**நலத் திட்ட உதவிகள்**

18.08.2023 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணிமண்டலத்தில் செயல்பட்டு வரும் 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது. 08.09.2023 அன்று தளிர்கள் உலக திட்டத்தில் (Forderverein Indien Saar Hilfe) பயன் பெற்று வரும் 3 பயனாளிகளுக்கு சிறுதொழில் செய்வதற்காக ரூபாய் 17,700/- சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது. 15.09.2023 அன்று தேனீ வளர்ப்பு மற்றும் தயாரிப்பு திட்டத்தின் வழியாக 40 பயனாளிகளுக்கு ரூபாய் 20,000/- வீதம் மொத்தம் 8,00,000/- கடன் உதவித் தொகை வழங்கப்பட்டது. 20.09.2023 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை பணிமண்டலத்தில் செயல்பட்டு வரும் 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

11.08.2023 அன்று பெங்களூரை சேர்ந்த திருமதி. மாலினி வெங்கட் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்திற்கு வருகை தந்து மிட்ஸ் நிறுவனம் வழியாக ஆரி தையல் கலை பயிற்சி பெற்ற பயனாளிகளை சந்தித்தார்கள். மேற்கத்திய ஆரி வேலைப்பாடுகள் குறித்து பயிற்சி பெற வேண்டும் என்று

அவர்களை ஊக்கப்படுத்தி ஆலோசனை வழங்கினார்கள். இந்த கூட்டத்தில் மொத்தம் 35 பெண்கள் கலந்து கொண்டனர். 13.09.2023 முதல் 15.03.2023 வரை விண்ணைத்தொடு குழந்தைகள் நலத்திட்டத்தின் ஆலோசனை கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் இத்திட்டத்தின் வழியாக பயனாளிகள் அடைந்த நன்மைகள் குறித்து ஆராயப்பட்டது. 13.09.2023 அன்று அருட்தந்தை நெல்சன் அவர்கள் மன உள நலன் திறன் வளர் பயிற்சி குறித்த கருத்தரங்கு நடத்தினார்கள். இந்த கூட்டம் மற்றும் கருத்தரங்கில் நான்கு மறைமாவட்டங்களில் உள்ள 32 பணியாளர்கள் கலந்து கொண்டனர். 20.09.2023 அன்று பெண்களுக்கான செல்போன் பழுதுபார்க்கும் பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியை நடத்தினார்கள். மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து 15 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியில் 30 பெண்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

### புனித அடைக்கல அன்னை மலங்கரை கத்தோலிக்க திருத்தலம், சுருளக்கோடு

சுருளக்கோடு புனித அடைக்கல அன்னை திருவிழா அன்னையின் பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் 8 வரை நடைபெற்றது. இத்திருவிழாவில் ஜாதி மதம் பேதம் இன்றி ஏராளமான அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டார்கள். இங்கு ஏராளமான அற்புதங்களும் அதிசயங்களும் நடைபெறுவதால் எல்லா நாட்களும் மக்கள் ஏராளமாக வந்து தாராளமாக ஜெபித்து செல்வது வழக்கம். இவ்வருட திருவிழாவில் மூன்று இந்திய கத்தோலிக்க திருச்சபைகளின் வழிபாட்டு முறையிலும் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. மார்த்தாண்டம் மறை மாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் இத்திருவிழாவில் கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றி பக்தர்களுக்கு ஆசீர் வழங்கினார். மக்கள் அலைகடலென திரண்டு வந்து அன்னையின் ஆசியை பெற்று சென்றது குறிப்பிடதக்கது.



# MCYM
## Youth Apostolate

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் எழுத்து போட்டிகளானது ஆகஸ்ட் மாதம் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு மார்த்தாண்டம் MJKM பள்ளிக்கூடத்தில் வைத்து மறைமாவட்ட MCYM அருட்சகோதரி ஊக்குநர் Sr. பிளவர் ஜோண் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. இளைஞர்களுக்கு ஓவியப்போட்டி (pencil drawing), கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் வினாடிவினா போட்டிகள் நடத்தப்பட்டது. வினாடிவினா போட்டியை அருட்தந்தை ஜோஸ் அவர்கள் சிறப்பாக நடத்தினார்கள். மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் போட்டியில் கலந்துகொண்ட இளையோர்களை வாழ்த்தி உற்சாகமூட்டினார். மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோனி ஆல்பிரட் மற்றும் மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தி இளையோரை உற்சாகமூட்டினர். இறுதியாக பொருளர் செல்வன். ஆன்றோ றோபின் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். போட்டிகள் மாலை 5.30 மணியளவில் முடிவடைந்தது.

# MCA
## Diocese of Marthandam

93-வது மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் மறு ஒன்றிப்பு மற்றும் சபை சங்கம விழாவானது மூவாற்றுபுழை மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்றது. இவ் விழாவில் மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பனச்சமூடு மறைவட்டம் கீழ்மாங்கோடு பங்கை சார்ந்த 10-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் 485/500 பெற்ற மாணவி T. ஜெஸ்லின் மகற்றோனாவுக்கு KMRM நிதி உதவியும் நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. மேலும் மேல்புறம் ஒன்றிய தலைவி கீழ்மாங்கோடு பங்கைச் சார்ந்த திருமதி ஞானசவுந்தரி அவர்களுக்கு பாராட்டு பத்திரமும் நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. MCA தலைவர், செயலர், பொருளர் மற்றும் பொறுப்பாளர்கள் என மொத்தம் 50 பேர் கலந்து கொண்டனர். காலை 8.30 திருப்பலி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் நம்முடைய பங்கேற்பு அனைவராலும் பாராட்டப்பட்டது.

## மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மாரியகிரி

### 1. கடற்கரை தூய்மை விழிப்புணர்வு பேரணி

கல்லூரியில் செயல்படும் தேசியமாணவர் படை சார்பில் கடற்கரை தூய்மை விழிப்புணர் பேரணியானது 04.08.2023 அன்று பூத்துறை மற்றும் தூத்தூர் கடற்கரை பகுதியை தூய்மையாக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழிப்புணர்வு பேரணியை பூத்துறை பங்கின் அருட்தந்தை பென்சிகர் துவங்கி வைத்தார். கல்லூரிதாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்ககுமரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

### 2. நுண்ணுயிரியல் துறை

நுண்ணுயிரியல் துறை சார்பாக 03.08.2023 அன்று முதுகலை இரண்டாமாண்டு பயிலும் மாணவர்கள் தென்தாமரைக் குளத்திலுள்ள கடற்பாசிகள் வழியாக உயிர் உயிரங்களை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு சென்று பயனடைந்தனர். 11.08.2023 அன்று ஆலஞ்சோலையிலுள்ள ஆலன் பால் பதனிடும் தொழிற்சாலை மற்றும் கழுவன்திட்டை மார்த்ததாண்டம் ஒருங்கிணைந்த முன்னேற்ற நிறுனத்திலுள்ள தண்ணீர் சுத்திகரிக்கும் நிறுவனத்திற்கு சென்று பயனடைந்தனர்.

### 3. இரத்ததான முகாம்

கல்லூரியில் இயங்கும் செஞ்சிலுவை சங்கம் மற்றும் தக்கலை அரசு மருத்துவமனை இரத்த வங்கி பிரிவும் மற்றும் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து இரத்ததான முகாம் 14.09.2023 அன்று நடைபெற்றது. இந்த முகாமினை கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவங்கி வைத்தார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். தக்கலை இரத்ததான மைய ஒருங்கிணைப்பாளர் ராஜன் மற்றும் போபி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 4. கல்லூரி முதல்வருக்கு பிரியாவிடை வாழ்த்து கூட்டம்

கல்லூரியை 7 ஆண்டுகளாக வழிநடத்திய முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்களுக்கு பிரியாவிடை வாழ்த்து கூட்டமானது மேதகுஆயர் முனைவர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் 15.09.2023 அன்று நடைபெற்றது. ஆசிரியர்கள் சார்பில் முனைவர் ரெஜிஸ் அவர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் சார்பில் திரு. மனோகர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். கல்லூரிதாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் முதல்வர் அவர்களுக்கு நினைவு பரிவு வழங்கினார்கள்.

## ST. PAUL'S EDUCATION ACADEMY
### Kanyakumari, Kuzhithurai, Mariagiri
### DIOCES OF MARTHANDAM

புனித பவுல் கல்வி நிறுவனமானது, பள்ளி மாணவர்களின் திறனை மேம்படுத்தவும் அரசு வேலை வாய்ப்புப்பெறவும் பயிற்சி வகுப்புகளை MJKM MSC Hr. Sec. School கிறிஸ்துராஜபுரம் மற்றும் St. Mary's School நட்டாலத்திலும் நடத்திவருகிறது.

இந்த பயிற்சி வகுப்புகளில் சேர்ந்துள்ள மாணவ மாணவிகளின் பெற்றோர்களுக்கான சிறப்பு வகுப்பு செப்டம்பர் 9-ம் தேதி சிறிஸ்துராஜபுரம் மற்றும் நட்டலத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தை மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். மேலும் திருமதி. விஜி கலா Sub Inspector of Police, அவர்களும் கலந்து கொண்டு வகுப்புகள் எடுத்து பெற்றோரை உற்சாகப்படுத்தினார்கள்.

## 2023-'24 கான பங்கு பேரவை ஒப்புதல் பெற்ற பங்கின் பெயர்கள் (புதிதாக ஒப்புதல் பெற்ற)

| | |
|---|---|
| 42. சூரியகோடு | 45. மீனச்சல் |
| 43. செக்கிட்டுவிளை | 46, கருமானூர் |
| 44. வேர்கிளம்பி | 47. வெள்ளச்சிபாறா |

# ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள்



- 3 ➢ பல்லுக்குழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 3 ➢ புனலூர் விளக்குமாதா ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ Shalom Home முதியோர் இல்லத்தில் புதிதாக கட்டியெழுப்பப் பட்ட கட்டிடத்தை அர்ச்சித்து அருளினார்.
- 6 ➢ மரியகிரி பங்கில் நடைபெற்ற Accompanying the Young Families -ன் மறைமாவட்ட அளவிலான துவக்க விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 6 ➢ சுருளோடு அடைக்கல அன்னை திருத்தலத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 8 ➢ பெத்தேரி மறைமாவட்டம் Myladumpotty ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.



- 9 ➢ விமலபுரம் பள்ளிக்கூடத்தில் St. Paul's Education Academy சார்பாக நடைபெற்ற மாணவர் பெற்றோர் வழிகாட்டு பயிற்சி முகாமில் கருத்துரையாற்றினர்.
- 9 ➢ நடைக்காவு 'பிறரன்பு அருட்சகோதரிகளின்' இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி நித்திய வார்த்தைப்பாடு திருநிகழ்வை தலைமையேற்று நடத்தினார்.
- 10 ➢ பாளையங்கோட்டை மறைமாவட்ட பொன்விழா கொண்டாட்ட திருப்பலியில் கலந்துக்கொண்டார்.
- 11 ➢ கோட்டார் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 12 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக் கொண்டார்.
- 14 ➢ திருச்சிலுவை திருநாளை முன்னிட்டு வெட்டூர்ணிமடம் Holy Cross அருட்கோதரிகளின் இல்லத்தில் நடைபெற்ற திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.
- 15 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் அருட்சகோதரிகளின் ஆண்டிறுதி தியானத்தை முன்னிட்டு மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.
- 15 ➢ மலங்கரை கத்தோலிக்க கல்லூரி முதல்வர் அவர்களின் பணி நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பிரிவு உபசார விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 16 ➢ பட்டம் பேராலயத்தில் நடைபெற்ற பேராயர் ஜார்ஜ் பனந்துண்டில் அவர்களின் நன்றி திருப்பலியில் கலந்துக் கொண்டார்.
- 16 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற பேராலய கட்டுமான Finance Council கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 17 ➢ அணக்கரை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற மறைமாவட்ட Finance Council கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

19 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான சமூக ஊடகங்களும் இளைய தலைமுறை சந்திக்கும் சவால்களும் என்ற ஒருநாள் கருத்தரங்கில் கலந்துக்கொண்டார்.

20-21 ➢ மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தில் நடைபெற்ற மறுவொன்றிப்பு மற்றும் சபைசங்கம நிகழ்வில் கலந்துக்கொண்டார்.

23 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற School Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ பனச்சமூடு ஆலயத்தில் நடைபெற்ற மாலை ஜெபத்திலும் ஆலய கட்டுமான கட்டுமான குழு கூடுகைக்கும் தலைமைத் தாங்கினார்.

24 ➢ தேவதானம்பட்டி மறைபரப்புத்தளத்தில் புதிதாக கட்டியெழுப் பபட்ட Education Centre யை அர்ச்சித்து அருளினார்.

25 ➢ நாகர்கோவில் Tara Hostel -ன் புது சிற்றாலயத்தை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றினார்.

28 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற ஐக்கிய கிறிஸ்மஸ் அறைக்கட்டளை ஆண்டு கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ தக்கலை மறைமாவட்டத்தின் முதல் சபை பேரவை கூடுகையில் உரையாற்றினார்.

29 ➢ கண்டன்விளை ஆலயத்தின் பொன்விழாவை முன்னிட்டு திருவிழா கொடியேற்றி மறையுரையாற்றினார்.

30 ➢ திண்டிவனம் எம்மாவுஸ் தியான இல்லத்தில் ஒருநாள் சிறப்பு தியானத்தை வழிநடத்தினார்.



## இம்மாதம் நினைவு கூர

அக்டோபர் 2023

1 – சிலுவைத் திருநாளுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
புனித குழந்தை தெரசாள்
மலங்கரை கத்தோலிக்க இளையோர் தினம்

1


2 – காவல் தூதர்கள்

3 – அரியோபாகஸ் மார் திவன்னாசியோஸ்

4 – புனித பிரான்சிஸ் அசிசி, மார் துமாத்தியோஸ்

4


5 – புனித பௌஸ்தினா

7 – ஜெபமாலைத் திருநாள்
மார் சர்க்கீசும் மார் பாக்கோசும்

7


8 – சிலுவைத் திருநாளுக்குப்பின் நான்காம் ஞாயிறு

9 – குலத்தந்தையான ஆபிரகாம்

10 – பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவு
இறைவாக்கினர் தானியேல்

10


11 – திருத்தொண்டர் மார் பிலிப்பு
திருத்தந்தை புனித 23-ாம் யோவான்

13 – மார் கார்ப்போஸ்

15 – சிலுவைத் திருநாளுக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
ஆவிலாவின் புனித தெரசா

18 – நற்செய்தியாளர் புனித லூக்கா

18


20 – இறைவாக்கினர் யோவேல்

22 – சிலுவைத் திருநாளுக்குப்பின் ஆறாம் ஞாயிறு
மறைபரப்பு ஞாயிறு
மார் ஹிலாரியோன்
திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல்

23 – அல்பேயுவின் மகன் மார் யாக்கோபு

23



28 – பெத்தேரி மறைமாவட்டம் நிறுவப்பட்ட நாள்

29 – சிலுவைத் திருநாளுக்குப்பின் ஏழாம் ஞாயிறு

## இளம் தம்பதியருக்கான மேய்ப்புப்பணியின் (AYF) ஆரம்பவிழா






## DM Sisters இளம் மறைபரப்பாளர்களின் கருத்தரங்கு (Little Missionaries Camp)




## MIDS




## ஷாலோம் ஹோம் (Shalom Home) புதிய கட்டிட அர்ச்சிப்பு






## தேவதானப்பட்டி மறைபரப்புத்தள கட்டிடம் அர்ச்சிப்பு





## நற்செய்தி சங்கம்

